# கலைஞரும் நானும்

83

**“நான் சிதம்பரத்தைச் சேர்ந்தவன் என்கிற வகையில், என்னுடன் தனிப்பட்ட முறையில் உரையாடவும் அவரிடம் செய்திகள் இருந்தன” என தனது நினைவுகளைப் பகிர்கிறார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன்.**



# “சிதம்பரம் நந்தி தடுத்துவிட்டதா?”

**கே.பாலகிருஷ்ணன்,**
மாநிலச் செயலாளர்-மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

“அரசியல்வாதியாக அவர் சாதித்தது மட்டுமல்ல, பல துறைகளிலும் அவரது ஆளுமை, பிரமிக்க வைக்கும் சாதனை. கலைஞர் என்றால் கடின உழைப்பு, இயங்கிக் கொண்டே இருக்கும் பண்பு ஆகியவை என்னை அதிகம் கவர்ந்தவை.

நான் மாநில அளவிலான பொறுப்புகளுக்கு வருவதற்கு முன்பிருந்தே கலைஞருடன் உரையாடும் சில சந்தர்ப்பங்கள் அமைந்திருக்கின்றன. அப்போதும் சரி, அதற்குப் பின்னரும் சரி, என்னைப் பார்த்தால் சிதம்பரத்தைச் சேர்ந்தவர்கள் பலரையும் பெயர் சொல்லி, விசாரிக்காமல் இருக்க மாட்டார். அந்த வகையில் என்னிடம் தனி அபிப்பிராயம் வைத்திருந்தார் என்று சொல்வேன்.

1986 -ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், தி.மு.கழகத்துடன் மார்க்சிஸ்ட் கட்சி உடன்பாடு கண்டிருந்தது. வார்டு, ஊராட்சிகளில், அந்தந்தப் பகுதி அளவிலேயே பேசி முடித்துக் கொள்ளப்பட்டன. ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாவட்ட ஒன்றியம் ஆகியவற்றுக்கான இடப் பங்கீடுகள் குறித்து மாநில அளவில், தலைவர்களால் பேசி முடிவெடுக்கப்பட்டன. அப்போது நான் கடலூர் மாவட்டச் செயலாளர் என்கிற வகையில், எங்கள் மாநிலச் செயலாளர் நல்லசிவம் மற்றும் ராமமூர்த்தி அவர்களுடன் அறிவாலயம் சென்றிருந்தேன்.

ஒன்றுபட்ட தென்னாற்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களை, நாங்கள் கேட்டோமோ, அந்த இடங்களில் வெற்றி வாய்ப்பு விவரங்களை நாங்கள் சொல்வதை விடவும், அவர் சொல்கிறார். “அந்த ஒன்றியத்தைக் கேட்கிறீர்களே... அங்க உங்களுக்கு எப்படி வாய்ப்பு இருக்குன்னு சொல்றீங்க?” என்பார். இதுபோல, ஊராட்சி அளவிலான தகவல்களில்கூட ‘அப்டேட்’டில் இருக்கிறார் என்பது எனக்கு வியப்பாக இருந்தது. அப்போதிலிருந்து அவருடன் நேரில் அறிமுகம் கிடைத்தது.

### நிறைவேறிய கோரிக்கைகள்

மாநில அளவில் விவசாயச் சங்கப் பொறுப்புகளில் நான் இருந்தபோது, சில கோரிக்கைகளுடன் முதலமைச்சர் கலைஞரைச் சந்தித்திருக்கிறேன்.

2006-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, தரிசு நில மேம்பாடு தொடர்பாக ஒரு சட்டம் கொண்டு வந்தார். அந்தத் திட்டத்தை வரவேற்று, சென்னை காமராஜர் அரங்கத்தில் மாநாடு நடத்தினோம். அந்தத் திட்டத்தில், அரசு நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்கிற கோரிக்கையுடன் மாவட்ட ஆட்சியர்களிடம் மனு அளிக்கும் போராட்டம் நடத்தியதுடன், கலைஞரைச் சந்தித்து, கோரிக்கை வைத்தோம். அடுத்த ஒரு வாரத்தில் அது தொடர்பாக ஆணை பிறப்பித்தார்.

‘நிலமற்ற ஏழைகள் அரசு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கும் மேல் குடியிருந்தால் அவர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்கப்படும்’ என உத்தரவிட்டார். அந்த உத்தரவு பயன் தராது என்று அவரைச் சந்தித்தோம். “என்ன செய்யணும்னு சொல்றீங்க” எனக் கேட்டார் “அரசு நிலங்களில் குடியிருந்தாலே கொடுக்க வேண்டும்” என்று சொன்னபோது, “அது குழப்பமாகிடாதா? நேற்று ஆக்கிரமித்து, இன்று பட்டா கேட்டால், எப்படி கொடுக்க முடியும்?” என்றார். “உங்க ஆட்சியில செய்யலன்னா வேற யாரு அவங்களுக்குச் செய்வாங்க?” என்றோம். உடனே அவர், “ஏன் நாங்க ஆட்சியில இல்லாம போகணும்னு நினைக்கிறீங்களா?” என கிண்டலாகக் கேட்டதுடன், ‘வேண்டுமானால், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்பவர்களுக்கு என மாற்றலாம்’ என்று, அந்தச் சட்டத்தில் திருத்தம் செய்தார்.



### சிறுதாவூர் நிலமீட்புப் போராட்டம் !

2007-ஆம் ஆண்டில், சிறுதாவூரில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வாங்கியிருந்த பங்களாவைச் சுற்றி, பட்டியலின மக்களிடமிருந்து மோசடியாகப் பெறப்பட்ட நிலங்களைத் திருப்பி அளிக்க வேண்டும் என நில மீட்புப் போராட்டம் நடத்தினோம். பட்டியலின மக்களுக்கு அரசு வழங்கிய நிலங்கள், மோசடியாக வேறு சிலருக்கு மாற்றப்பட்டு, பின்னர் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வாங்கியிருந்தார். அந்த நிலங்களை அரசு மீட்டு, அங்கு விவசாயம் செய்தவர்களிடமே வழங்க வேண்டும் எனப் போராட்டத்தை நடத்தினோம்.

அந்தக் கோரிக்கைகளுடன் என்.வரதராசன் உள்ளிட்ட தலைவர்களுடன் கலைஞரைச் சென்று சந்தித்தபோது, அதில் உள்ள நியாயத்தைப் புரிந்துகொண்டாலும் ‘நீங்க போங்க பார்த்துகிறேன்’ என அனுப்பி வைத்தார். ‘முடிவு எதுவும் சொல்லாமல் அனுப்புகிறாரே’ என்கிற குழப்பத்துடன் வந்துவிட்டோம். ஆனால், அடுத்த இரண்டு நாளில் சட்டமன்றத்தில் சிறுதாவூர் நில மீட்பு குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க, நீதிபதி கே.பி.சிவசுப்பிரமணியம் தலைமையில் ஒருநபர் குழு அமைத்து உத்தரவிட்டார்.

**கட்சி, ஆட்சியில் நிர்வாகம், மாநில உரிமை, ஜனநாயக உரிமைகளைப் போராடிப் பெறுவது ஆகியவற்றில் கலைஞர் மகத்தான தலைவராக என்றும் போற்றப்படக் கூடியவர்..!“**

### நந்தி தடுத்துவிட்டதா?

2006-ஆம் ஆண்டில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்திருந்தபோது, நான் சிதம்பரம் தொகுதியில் போட்டியிட்டேன். தேர்தல் பிரச்சாரத்துக்கும் வந்திருந்தார். ஆனால், அந்தத் தேர்தலில் தோல்வி அடைந்திருந்தேன். தேர்தலுக்குப் பின்னர், அவரது பிறந்தநாளின்போது வாழ்த்துவதற்கு, என்.வரதராஜன், டி.கே.ரங்கராஜன், ஜி.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட தோழர்கள் சென்றிருந்தோம். என்னைப் பார்த்தவர், “என்ன பாலகிருஷ்ணன், சிதம்பரத்தில இருந்து வர முடியாம உங்கள நந்தி தடுத்துடுச்சா” என்றார் வேடிக்கையாக. எத்தனையோ வெற்றி தோல்விகளைப் பார்த்தவர், என்னைப் பார்த்ததும், ‘நந்தனார்’ கதையுடன் இணைத்துப் பேசி கலகலப்பூட்டினார்.

வரதராஜன் தோழரைப் பார்த்து, “என்ன சோர்வா இருக்கீங்க, உடம்பு எதுவும் சரியில்லையா?” என விசாரித்தார். அவரும் “இல்லையே நல்லாத்தான் இருக்கேன்” எனச் சொன்னார். ஆனால், நாங்கள் திரும்பி அலுவலகம் வந்ததும், வரதராஜனுக்கு மயக்கம் வந்துவிட்டது. அவர் சோர்வாக இருந்தது, அவருக்கே தெரியவில்லை. கலைஞர் அதை நுட்பமாக கவனித்துக் கேட்டதை, அப்போது அறிந்ததும் ஆச்சர்யம் அடைந்தோம்.

### பக்கத்து இருக்கை

2011-ஆம் ஆண்டில் நான் சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரானபோது, என் இருக்கைக்கு அடுத்த இருக்கையாக கலைஞருக்கு இருக்கை ஒதுக்கி இருந்தனர். எனக்கும், தி.மு.க கொறாடாவுக்கும் இடையிலான இருக்கையை அவருக்கு ஒதுக்கி இருந்தனர். அவர் சட்டமன்றம் வருவதில்லை என்பதால், கலைஞர் இருக்கை எப்போதும் அவரை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

அப்போது ஒருநாள் தொலைபேசியில் அழைத்து, ‘தி.மு.க. கொண்டு வரும் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும்’ எனக் கேட்டார். “என்கிட்ட கேட்கிறீங்களே, நான் என்ன செய்ய முடியும், கட்சி தலைமைகிட்ட பேசுங்கங்கண்ணே” என்றேன். “கட்சித் தலைமையிடம் பேசுவதுதான் முறை. ஆனாலும், நீங்க கட்சிக் கொறடாவா இருக்கீங்க, உங்ககிட்ட சொல்றதும் முறை இல்லையா” என்று கூறி, “நியாயத்துக்காக நில்லுங்க” என்றார். இப்படி உரிய அங்கீகாரங்களை அளிப்பதில், தோழமை பேணுவதில் கவனம் காட்டியவர்.

இப்போது மீண்டும் விவாதத்துக்கு எழுந்துள்ள அருந்ததியருக்கான உள் இட ஒதுக்கீடு குறித்த கோரிக்கைகளை நாங்கள் நீண்ட காலமாகவே முன்வைத்து வந்தோம். 2009-ஆம் ஆண்டில் எங்கள் கோரிக்கைகளை ஏற்று, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, ஒருமித்த கருத்து எட்டி சட்டமன்றத்தில் உள் ஒதுக்கீடு சட்டம் கொண்டு வந்தார்.

அவரிடம் கோரிக்கைகளைக் கொண்டு சென்றால், அதில் நியாயம் இருக்கிறது என்கிற பட்சத்தில், அந்த வேலை துரிதமாக நடந்துவிடும். தள்ளிப்போடுவது நடக்காது. அதுபோல, அடித்தட்டு மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றால், அதில் தயக்கமே காட்டியதில்லை. அதுமட்டுமல்ல, கட்சி, ஆட்சியில் நிர்வாகம், மாநில உரிமை, ஜனநாயக உரிமைகளைப் போராடிப் பெறுவது ஆகியவற்றில் கலைஞர் மகத்தான தலைவராக என்றும் போற்றப்படக் கூடியவர்..!''

....பகிர்வார்கள்

## கலையை மறைக்கும் மதம்!

‘கலை என்றால் அது இந்துவா, முஸ்லிமா?’ என்று கேட்கும் மதவெறி. சமீபமாக வங்கதேசத்தில் நடைபெற்று வரும் வன்முறைகளின் அடிநாதமாக இந்த மதவெறி இருக்கிறது.

மதவெறியால், சாதாரண மக்கள் மட்டுமே பாதிக்கிறார்கள் என்று புரிந்துகொள்வது, பிரச்சினையைச் சுருக்கிப் பார்க்கும் பார்வை. கலைஞர்கள், சாதனையாளர்கள் உள்ளிட்டோரின் கடந்த கால நினைவுகளையும் அழித்துவிடுவதுதான், மதவெறி செய்யும் சித்துவேலை!

அப்படி ஒரு சம்பவம்தான் வங்கதேச வன்முறையில் நடைபெற்றிருக்கிறது. இந்திய அளவில் மிகப்பெரிய திரைக் கலைஞராகக் கொண்டாடப்பட்டவர் இயக்குநர் ரித்விக் கட்டக். அவர் இந்தியராகவே அடையாளப் படுத்தப்பட்டாலும் அவரது வேர் வங்கதேசத்தில்தான் இருந்தது. அந்நாட்டின் தலைநகரம் டாக்காவில் பிறந்தவர் அவர். அப்போது, அது வங்கதேசமாக இருக்கவில்லை. ஒருங்கிணைந்த இந்தியப் பகுதியாக இருந்தது.

வங்கதேசத்தின் ராஜ்சஷி மாவட்டத்திலுள்ள மியான்பரா எனும் பகுதியில், அவரது பூர்வீக வீடு இருந்தது. உலகமெல்லாம் இருக்கும் கட்டக்கின் ரசிகர்களுக்கு, அந்த வீடு புனிதத் தலமாக இருந்து வந்தது. அந்த வீட்டின் முன் பகுதி ராஜ்சஷி ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியும், பின் பகுதியில் கட்டக்கின் குடும்பமும் வாழ்ந்து வந்தது. அந்த வீட்டை ரித்விக் நினைவுச் சின்னமாக அறிவிக்க வேண்டும் என்று 2017-ஆம் ஆண்டு முதலே அந்நாட்டின் பல திரைப்பட சங்கங்கள் குரல் கொடுத்து வந்தன.

கவிஞர் ரவீந்திரநாத் தாகூர், இசைக் கலைஞர்கள் உஸ்தாத் சகோதரர்கள் எனப் பல பிரபலங்கள் பார்வையிட்டுச் சென்ற அந்த வீடு, கடந்த 6-ஆம் தேதி மத வன்முறைக் கும்பலால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. அந்தச் செய்தியே இப்போதுதான் தெரிய வரும் அளவுக்கு, அங்கு ஊடகத்தின் குரல் நசுக்கப்பட்டுள்ளது.

2025-இல் நூற்றாண்டு காணும் ரித்விக் கட்டக், தனது படங்களை வங்கதேசப் பிரிவினையின் பின்னணியில் வைத்தே இயக்கியிருக்கிறார். நாட்டின் பிரிவினைக்கு மட்டுமல்லாமல், அனைத்து வகையான பிரிவினைகளுக்கும் எதிராக இருந்த ஒரு கலைஞனுக்கு மதவெறி தனது மூர்க்கத்தைக் காட்டிவிட்டது.

## ஃப்ளாஷ்பேக்



### பிறந்த நாள் வாழ்த்து!



சி.வீரகணேசன்

1-3-1988 அன்று, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் பிறந்த நாளின்போது நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவிக்க கோபாலபுரம் சென்றேன். பிறந்தநாள் வாழ்த்துக் கூறி, இளைஞர் அணி வளர்ச்சி நிதியையும் அவர் கரங்களில் வழங்கினேன். என் வாழ்வில் மறக்க முடியாத தருணம் அது. இன்றளவும் மாறாத தலைவரின் பேரன்பிற்கு ஈடு இணை இல்லை.

**- சி.வீரகணேசன், மாநிலத் துணைச் செயலாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை. சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### தேசிய முன்னணித் தலைவர்கள்!

1988-ஆம் ஆண்டு, அரசியலில் இந்திய அளவில் மாற்று ஏற்பாட்டைக் காண வேண்டும் என்பதற்காக, கலைஞரின் முன்முயற்சியில் டெல்லியில் ஏழு கட்சித் தலைவர்கள் கூடிப் பேசி தேசிய முன்னணி அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்பின் தொடக்க விழாவினை சென்னையில் நடத்தத் திட்டமிட்டு, செப்டம்பர் 17-ஆம் தேதி முப்பெரும் விழாவுடன் இணைத்து, ‘தேசிய முன்னணித் தொடக்கவிழா பேரணி’யாக நடைபெற்றது. வி.பி.சிங், என்.டி.ஆர், உள்ளிட்ட தலைவர்கள் அனைவரும் ‘பெரியார் சிலை’, அண்ணா நினைவிடம் எனச் சென்று மரியாதை செய்தனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

573

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131